(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(5).]

# பாராளுமன்றம்

## 13ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 பெப்புருவரி 13 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 மாச்சு 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5768/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில், கடஹபொல - ரம்பாவெவ வீதி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உரியதான வீதியின் நீளம் மற்றும் அகலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான நிர்மாணிப்பாளர் கேள்விப்பத்திர நடைமுறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும்;

(iv) ஆமெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைக்கேள்வியாளரின்/நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி வீதியின் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்காக செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதியின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வாகனப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கான வேலைத்திட்டம் ஒன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், முழுக் கருத்திட்டத்தின் ஊடாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கிரயம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பாதிக்கப்படுகின்ற தரப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நட்டஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5858/ '15

கௌரவ சாந்த பண்டார,— மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது நாட்டினுள் நாளாந்தம் பயன்படுத்தப்படும் டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களின் சராசரி அளவு எத்தனை லீட்டர்கள் என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு எரிபொருள் வகைக்கும் தற்போது அறவிடப்படுகின்ற வரித் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) எதிர்வரும் காலத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் விதத்தில் மேற்படி வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்கமைய ஒவ்வொரு எரிபொருள் லீட்டருக்கும் உரிய சந்தை விலை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 மார்ச்சு 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4784/ '14

கௌரவ அஷோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டினுள் காட்டு யானைகளினால் ஏற்படும் மனித உயிரிழப்புக்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நாடு பூராகவும் தேவைப்பட்டுள்ள மின் வேலிகளின் (யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வேலிகள்) நீளம் குறித்து அறிவீர்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தேவைப்பாடு யாது என்பதையும்;

(iv) குருணாகல் மாவட்டத்துக்குத் தேவையான மின் வேலிகளின் நீளம் யாது என்பதையும்;

(v) மின் வேலிகளை அமைப்பதற்கு இத்தடவை வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5447/ '14

கௌரவ அநுர திஸாநாயக்க,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006.01.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதாக "அன்புக்குரிய மூத்த பிரசைகளே" எனும் தலைப்பில் அரசினால் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதா என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலின்போது முன்னாள் சனாதிபதியின் கையொப்பத்துடன் கூடியதாக வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலின் கீழே 'நான் சொல்வதை செய்கின்ற, செய்வதை சொல்லுகின்ற ஒருவன்" என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை மேற்படி சம்பள முரண்பாடு நீக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) இது சம்பந்தமாக 2012.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய வினாவுக்கு விடையளிக்கின்றபோது, மிக விரைவில் இச்சம்பள முரண்பாட்டை நீக்குவதாக அறிவிக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5769/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில், பன்னல - குளியாப்பிட்டி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உரியதான வீதியின் நீளம் மற்றும் அகலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான நிர்மாணிப்பாளர் கேள்விப்பத்திர நடைமுறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும்;

(iv) ஆமெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைக்கேள்வியாளரின்/நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி வீதியின் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்காக செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதியின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வாகனப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், முழுக் கருத்திட்டத்தின் ஊடாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பாதிக்கப்படுகின்ற தரப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நட்டஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5774/ '14

கௌரவ பாலித தெவரப்பெரும,— அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்துகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில், ஹொரவள உப அலுவலக எல்லையில், ஹொரவள தியகிதுலகொட வத்த, மத்துகம-அளுத்கம வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள திரு. அமரபால ஜயநெத்திக்குச் சொந்தமான 2.8 பேச்சஸ் பரப்புடைய சிறிய காணியொன்றில் நிரந்தரக் கட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டவமைப்புக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அயலிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் வீதிக்கும், அயலில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கும் இடையூறு ஏற்படும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் திட்டவமைப்பை அங்கீகரித்தல் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அந்தக் கட்டடத்தின் திட்டவமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நடைமுறை யாதென்பதையும்;

(iii) அந்த அங்கீகாரம் எத்தரப்பின் தேவைக்கமைய வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி வீடு அல்லது கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பத்றகான அனுமதியை வழங்குவதற்காக காணப்பட வேண்டிய குறைந்தபட்ச நிலப்பரப்பு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.261/'14

கௌரவ புத்திக பதிரண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றுக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.262/'14

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.263/'14

கௌரவ புத்திக பதிரண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.264/'14

கௌரவ புத்திக பதிரண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.304/ '15

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ டி.எம். ஜயரத்ன

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே

கௌரவ பி.தயாரத்ன

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ ஏ.எச்.எம். பௌசி

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ ஜீவன் குமாரணதுங்க

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ திஸ்ஸ கரல்லியத்த

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ ஏ.பி. ஜகத் புஷ்பகுமார

கௌரவ விஜித பேருகொட

கௌரவ லஸந்த அழகியவன்ன

கௌரவ அனுர பிரியதர்சன யாப்பா

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ மொஹான் பிரியதர்சன த சில்வா

கௌரவ லக்ஷமன் வஸந்த பெரேரா

கௌரவ (திருமதி) (டாக்டர்) சுதர்சனி பர்னாந்துபுள்ளே

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ டப்ளியூ.டி.ஜே. செனெவிரத்ன

கௌரவ எஸ்.பீ. நாவின்ன

கௌரவ காமினி விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ எஸ்.பீ. திசாநாயக்க

கௌரவ டியூ குணசேகர

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ லலித் திசாநாயக்க

கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய

கௌரவ சுசந்த புஞ்சிநிலெமே

கௌரவ சரண குணவர்தன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னியாரச்சி

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி

கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ நிரன்ஜன் விக்கிரமசிங்க

கௌரவ ஜானக பண்டார

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ சாந்த பண்டார

கௌரவ பியசேன கமகே

கௌரவ (திருமதி) நிருபமா ராஜபக்ஷ

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ (கலாநிதி) சாலிந்த திசாநாயக்க

கௌரவ நிசாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ சரத் வீரசேகர

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ விதுற விக்ரமநாயக்க

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ வை.ஜீ. பத்மசிரி

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ சீ.பி.டீ. பண்டாரநாயக்க

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ

கௌரவ துலீப் விஜேசேக்கர

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ டபிள்யூ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ ஆர். துமிந்த சில்வா

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ கனக ஹேரத்

கௌரவ அதாவுத செனெவிரத்ன

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ குமார வெல்கம

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ஜயந்த கெடகொட

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ பொ. பியசேன

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன்

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ ஹேமால் குணசேக்கர

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ பிரபா கணேசன்

கௌரவ விஜய தஹநாயக்க

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ ஜயசிங்க பண்டார

கௌரவ திலும் அமுணுகம

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க மீது நம்பிக்கையின்மை,—

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பொறுப்பும், சட்டத்தை அனைத்து பிரசைகளுக்கும் நியாயமான விதத்தில் நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும், சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது பக்கச்சார்பின்றி பொலீஸ், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களை உரியவாறு வழி நடாத்துவதன் மூலம் அரசியல் கட்சி பேதங்கள் அல்லது ஆட்களின் அந்தஸ்துகளின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும், அவ்வாறு சட்டம் நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சின் தற்போதைய அமைச்சரான கௌரவ ஜோன் அமரதுங்க —

(அ) தனது பதவியை பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த பொறுப்புகளை நியாயமான விதத்திலும் பக்கச்சார்பின்றியும் நடைமுறைப்படுத்துவதற்கு தவறியுள்ளாரென்பதை தெளிவாக காணக்கூடியதாயுள்ளதாலும்;

(ஆ) இலங்கையின் தேர்தல் தொகுதிகள் பலவற்றிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் அப்பாவி தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக, எதிர் அரசியல் கட்சிகளின் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பிரதேச தலைவர்களால் முடுக்கிவிடப்பட்ட வன்முறையின் ஊடாக ஏற்பட்ட உயிரிழப்புகள், உடல் ரீதியிலான பாதிப்புகள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பில் உரியவாறு விசாரணை நடாத்தி குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதி மன்றத்தின் முன்னே ஆஜர்படுத்துவதற்கு பொலீஸ் உள்ளிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்களை வழிநடாத்துவதைத் தவறவிட்டு, பக்கச்சார்பாக செயலாற்றியுள்ளார் என்பதை தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளதாலும்;

(இ) அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க வத்தளை பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் நடாத்தப்பட்ட 2015 சனவரி 30 ஆம் திகதி அவ்விடத்துக்கு வருகைதந்து, வரவேற்புக் கூட்டமொன்றை நடாத்துகின்ற விதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியாளர்களை அவ்விடத்துக்கு அழைத்து அவர்களை கோபமூட்டுகின்றவாறான உரைகளைச் செய்வதற்கு ஏற்பாடுசெய்து, அதன் பின்னர் வன்முறையாளர்கள் குழுவொன்று பிரதேச சபையின் சபைக்கூட்டம் நடைபெற்ற சபாமண்டபத்தினுள் சட்ட விரோதமாக பலவந்தமாகப் புகுந்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களைத் தாக்கி அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதான இச்சம்பவம் முழுமையாகவே உயர் பொலீஸ் உத்தியோகத்தர்கள் அவதானித்துக் கொண்டிருக்கையில் நடைபெற்றதென்பது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், இத்தகைய பாரதூரமானதொரு சம்பவம் கௌரவ ஜோன் அமரதுங்க அரசியல் தலைமைத்துவம் வகிக்கின்ற வத்தளை தேர்தல் தொகுதியில் நடைபெற்றது அவரது மறைமுகமான ஒத்துழைப்பு மற்றும் உதவியினாலென்பதை தெளிவாக காணக்கூடியதாயுள்ளதாலும், இது தொடர்பிலான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட வன்முறையாளர்களை கைதுசெய்து உரிய நடவடிக்கையெடுப்பதற்கு பொலீஸ் தவறியுள்ளதனாலும், குறிப்பாக நீதிமன்றத்திற்கு ஆஜராக்கப்பட்ட சில சந்தேகநபர்கள் அன்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அறியவந்துள்ளதனாலும், இத்தகைய பலத்த குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகநபர்களை இவ்வாறு உடனடியாக பிணையில் விடுவித்திருப்பது அரசியல் நிர்ப்பந்தத்தின் காரணத்தினாலாகும் என்பதை தெளிவாக காணக்கூடியதாயுள்ளதாலும்;

(ஈ) தலவாக்கலை பொலீஸ் பிரிவில், கிரேட் வெஸ்ரன் கல்கந்த தோட்டத்தில் வசித்த மனோஜ் என்பவர் தலவாக்கலை பொலீசாரால் அனாவசியமான விதத்தில் பின்தொடர்ந்து செல்லப்பட்டதன் காரணமாக அச்சத்துக்குள்ளாகி நீர்த்தேக்கத்தில் குதித்து மரணமடைந்த சந்தர்ப்பத்தில் பொலீஸார் உரியவாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை கூறியபோது, அப்பாவி தோட்டத் தொழிலாளர்களிடம் பழிவாங்கும் நோக்கத்துடன் பொலீஸார் செயற்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சின் தலைவர் என்றவகையில் திரு. ஜோன் அமரதுங்க, சுயாதீனமானதொரு விசாரணையை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, அதனைப் புறக்கணித்து இச்சம்பவம் தொடர்பில் ஆர்ப்பாட்டம் நடாத்திய அப்பாவி தோட்டத் தொழிலாளர்களை தற்போது கைதுசெய்து வருவதன் காரணத்தினால், அவர்கள் தொடர்ந்தும் இன்னலுக்கு உள்ளாகியுள்ளதாலும்;

(உ) இதற்கு மேலதிகமாக, நீதிமன்றங்களின் நீதிபதிகளைக் கூட அவர்களது நீதிபதி ஆசனங்களிலிருந்து பலவந்தமாக அகற்றுவதற்கு தூண்டிய ஆட்களுக்கு எதிராக நடவடிக்கையெடுப்பதற்கு பொலீசார் தவறியதன் காரணமாக இத்தகைய பல சம்பவங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறியவந்துள்ளதோடு, இந்த அமைச்சரின் அமைச்சின் கீழ் உள்ள பொலீசாரின் முனைப்பற்றதன்மை இப் பாதகச் செயல் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை தெளிவாக அறியக்கிடைத்துள்ளதாலும், ஒட்டுமொத்தமாக நாட்டின் அனேகமான பிரதேசங்களில் சட்டத்தின் ஆதிக்கம் முறிவடைந்து காட்டுச் சட்டம் ஆட்சிபுரிகின்ற காலகட்டத்திற்கு பிரவேசிப்பதைக் காணக்கூடியதாயுள்ளதாலும், சில பொலிஸ் நிலையங்கள் பாதிக்கப்பட்ட ஆட்களின் முறைப்பாடுகளை ஏற்பதைக்கூட நிராகரித்துள்ளதென்பதற்கான தகவல்கள் கிடைத்துள்ளதாலும்;

மேற்கூறிய அனைத்து விடயங்களையும் ஆராய்கின்ற போது மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் ஜோன் அமரதுங்க பக்கச்சார்பாக செயலாற்றியுள்ளாரென்பதையும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தலைமைத்துவம் வழங்கத்தவறியுள்ளாரென்பதையும், எதிர்க்கட்சி அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களின் போது சட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்த தவறியுள்ளாரென்பதையும் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளதால், மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க தொடர்ந்தும் மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சராக செயலாற்றுவதற்கான ஆற்றல் தொடர்பில் நம்பிக்கை இல்லையென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.